I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES D.W.1
OS.NO.21/2023

**Name** : Velmurugan
**Father/Husband Name** : Kasi

**Age** : 61

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 20.08.2025**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**விசாரணை தொடங்கும் நேரம்: 03.00 p.m**

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு தாக்கல் செய்துள்ள கோபிநாத் என் தம்பி. 2 வது பிரதிவாதி பழனி என் தம்பி. வாதி , பிரதிவாதிகள் மற்றும் பழனி ஆகியோர்கள் இறந்துபோன காசி கவுண்டர் என்பவரின் வாரிசுகள். வழக்கு தாக்கல் செய்துள்ள கோபிநாத் தாவா சொத்து A and B Schedule சொத்தை மூன்றாக பிரித்து ஒரு பாகம் வாதிக்கு பிரித்து கொடுக்க கோரி தாவா தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். A schedule சொத்து கீழ் வடுகன்குட்டை கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். B scedule சொத்துக்கள் ஜாப்ராபேட்டை கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். C schedule சொத்து 100 Beedi Branch என்றால் சரிதான். இதில் A schedule சொத்து என் அப்பா காசி கவுணடருக்கு பாகத்தின் மூலமாக வந்த சொத்து என்றால் சரிதான். என் அப்பா 06.09.2019 அன்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதற்கு முன்னர் என் தாய் 06.11.2014 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். A schedule சொத்துக்களை என் அப்பா சாகும் வரை எந்தவித உயிலும் செட்டில்மெண்ட்டும் யாருக்கும் எழுதவில்லை என்றால் சரிதான். அவர் எந்தவித பத்திரமும் ஏற்படுத்தாமல் இறந்துவிட்டதால் அவர்களின் வாரிசுகளான

மூவரும் தலா 3 ல் 1 பங்கு என்றால் சரிதான். A schedule சொத்துக்களை எங்களுக்குள் எழுத்துமூலமாக எந்தவித பாக பிரிவினையும் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். அதனால் பிரிக்கப்படாத சொத்து என்பதால் 3ல் 1 பாக சொத்தை வாதிக்கு பிரித்து கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு பாத்தியப்பட்டு A schedule சொத்து இன்று வரை என் அப்பா பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். பிரிக்கப்படாத A schedule சொத்து 3ல் 1 பங்கு வாதிக்கு கொடுக்க எனக்கு ஆட்சேபணை கிடையாது என்றால் சரிதான்.

3 வீடுகள்– கதவு எண்.212, 213, 214 ஆகியன வாதி, நான், 2வது பிரதிவாதி தனித்தனியே வீடு கட்டி வசித்து வருகிறோம் என்றால் சரிதான். சாட்சி சொல்கிறார் ஒரே வீடு அரசு 123A, B, C என்று ஒரே வீட்டில் 3 கதவு எண் கொடுத்துள்ளார்கள். ஒரே வீட்டில் நாங்கள் தனித்தனியாக வசிக்கிறோம். 123A, B, C என்று ஒரே வீட்டில் வசிக்கிறோம் என்பதை காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த 3 வீடுகளும் பாகம் பிரிக்கப்படாமல் பொதுவில் கட்டப்பட்டதாகும். கதவு எண்.212 வாதி கோபிநாத் என்பவருக்கு சொந்தமானது. என்னுடைய கதவு எண். 213, 2வது பிரதிவாதியின் கதவு எண். 214. இந்த 3 வீடுகளும் இந்த தாவாவில் காட்டியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் என்னுடைய வாக்குமூலத்தில் வீடுகளை தாவாவில் காட்டவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

சர்வே எண். 57/8 தாவாவின் முதலாவது ஐடம் மற்றும் தாவா 9வது ஐடம் சர்வே எண். 126/2 D ஆகிய சொத்தை தாவாவில் காண்பிக்கவில்லை என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. B Schedule வா.சா.ஆ. 2 படி 13.03.1996 கிரய பத்திரம் முன்னிலைக்கு வாதி மற்றும் பிரதிவாதிகள் இரண்டு பேரும் கூட்டாக சேர்ந்து வாங்கிய சொத்துக்கள் என்றால் சரிதான். அதற்கு எங்கள் 3 பேருக்கும் தான் கூட்டு பட்டா உள்ளது என்றால் சரிதான். எங்கள் 3 பேரின் பெயரில் உள்ள B Schedule சொத்து எங்களுக்குள் எழுத்து மூலமாக பாக

பிரிவினை ஆகவில்லை ஆனால் அப்பா பங்கிட்டு கொடுத்துவிட்டார், அவரவர்கள் பயிர் வைத்துக்கொள்ளுங்கள் என்று கூறிவிட்டார். அதற்கு ஆதாரம் இல்லை.

எங்களுக்குள் போய் வாய்மொழியாக கொடுத்து சொத்தை சார் பதிவாளர் அலுவலகம் சென்று எங்களுக்குள் பிரித்து எழுதி கொள்ளவில்லை என்றால் சரிதான். என் அப்பா வாய்மொழியாக பங்கிட்டு கொடுத்தது தேதி மாதம் வருடம் நினைவில்லை தோராயமாக சுமார் 20 வருடத்திற்கு முன் இருக்கும்.அன்றிலிருந்து இன்று வரை நாங்கள் 3 பேரும் பயிர் வைத்து அனுபவித்து வருகிறோம். என் அப்பா தனித்தனியாக பங்கிட்டு கொடுத்த சொத்தை பட்டா பிரித்து கொடுங்கள் என்று நாங்கள் போய் கேட்கவில்லை, இன்று வரை கூட்டு பட்டா தான்.

இன்று வரை நாங்கள் 3 பேரும் சேர்ந்து வாங்கிய சொத்தில் என் தந்தையாருக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல இது எங்கள் பணமோ எங்களின் உழைப்போ கிடையாது, என் அப்பா எங்கள் பெயரில் எழுதி வைத்தது. இந்த கிரயத்தின் ரூபாய் என் தந்தையார் கொடுத்து எங்கள் பெயரில் வாங்கப்பட்டது என்று பத்திரத்தில் எழுதப்படவில்லை என்றால் சரிதான்.

3 பேரும் வாங்கிய கிரய பத்திர சொத்தில் தான் எங்களுக்கு 3 ல் 1 பங்கு வேண்டும் என்று கோபிநாத் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நாங்கள் 3 பேரும் வாங்கிய சொத்தில் வாதி கோபிநாத் என்பவருக்கு 1 பாகம் உள்ளது. அவருக்கு அவருடைய பாகம் கொடுப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.

A Schedule மற்றும் B Schedule சொத்தில் 3 ல் 1 பாகம் வாதிக்கு உள்ளது என்றால் சரிதான். C Schedule – வா.சா.ஆ. 17– அதை வாதி கோபிநாத் என்பவர்கள் சீட்டு நடத்தி பீடி மண்டியை பார்த்து வந்தார் என்றால் சரியல்ல, நான் தான் பார்த்து வந்தேன். ஆனால் அதற்கான ஆவணம் எதுவும் இல்லை. ஆவணம் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. பீடி மண்டியை அவர் பார்த்து

வந்தாலும் 3ல் 1 பங்கு தான் கேட்கிறார் என்றாலும் அந்த மண்டியை மூடி விட்டார்கள். ஆனால் அந்த மண்டி இருந்தால் 3ல் 1 பங்கு கொடுப்பதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை.

A Schedule, என் தந்தையார் பெயரில் உள்ள சொத்து B Schedule எங்கள் பெயரில் உள்ள சொத்து ,C Schedule – மண்டி ஆகிய 3 சொத்துக்களிலும் 3ல் 1 பாகம் வாதிக்கு கொடுப்பதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை.தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரிதான். அவரவர்இருக்கும் வீட்டை அவரவர்களுக்கு ஒதுக்கி கொடுத்து பாகம் பிரிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**விசாரணை முடிந்த நேரம்:** 03.25 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/Tmt.G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.